நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.
**பிரிவு 313(1)(ஆ) CrPC –இன் படியான விசாரணை**

எதிரி : சுந்தர்ராஜன்

| | | | |
|---|---|---|---|
| 1 | கேள்வி | : | அ.சா.1 –தவசி, அவருடைய சாட்சியத்தில் 2021ம் ஆண்டு கொரோனா காலகட்டத்தில் அகத்தீஸ்வரத்தில் உள்ள அ.சா.1ன் வீட்டிலிருந்து மாலை 05.00 மணிக்கு ஸ்ரீதர் அவருக்கு சொந்தமான புல்லட் இருசக்கர வாகனத்தில் சென்னையில் இருக்கும் அவரது மனைவி மற்றும் குழந்தைகளை பார்ப்பதாக கூறி கிளம்பி சென்றதாகவும், அன்று இரவு 11.30 மணிக்கு கோவில்பட்டி – சாத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த அ.சா.1ன் மகன் ஸ்ரீதர் புல்லட்டின் மீது லாரி மோதி விபத்து ஏற்படுத்தி சென்றுவிட்டதாகவும், அ.சா.1 வீட்டிலிருந்து கிளம்பி விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது அந்த விபத்தில் அ.சா.1ன் மகன் உடல் நசுங்கி மூளை வெளியே வந்ததாகவும், சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் நடந்த சம்பவத்திற்கு அ.சா.1 புகார் மனு அளித்தாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | தெரியாது |
| 2 | கேள்வி | : | அ.சா.3 திரு.கருத்தப்பாண்டி என்ற பாண்டி அவருடைய சாட்சியத்தில் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் இரவு 10.30 மணியளவில் கோவில்பட்டி – சாத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் ஸ்ரீதர் என்பவர் ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தில் உப்பத்தூர் ஜங்சனுக்கு முன்பாக சாத்தூர் நோக்கி வந்துகொண்டிருந்தபோது சாலையில் நிலை தடுமாறி சாலையில் போட்டிருந்த வெள்ளை கோடு அருகே விழுந்துவிட்டதாகவும், அவர் ரோட்டிலிருந்து எழுந்து நிற்பதற்குள் பின்னால் அதே திசையிலிருந்து வந்த லாரி அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டு லாரி நிற்காமல் சென்றுவிட்டதாகவும், இதனால் இருசக்கர வாகனத்தில் வந்த நபருக்கு தலை நசுங்கி, உடலில் கை, கால்கள் முறிந்து, அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் |
| 3 | கேள்வி | : | அ.சா.4 திரு.ராமர் அவருடைய சாட்சியத்தில் சுமார் 4, 5 ஆண்டுகளுக்கு முன்னர் காலை 08.00 – 09.00 மணியளவில் உப்பத்தூர் விலக்கில் வைத்து முந்தைய தினம் இரவு விபத்து நடந்தது சம்பந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரிவரைபடம் தயார் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் |
| 4 | கேள்வி | : | அ.சா.5–திரு.மூக்கையா சிறப்பு சார்பு ஆய்வாளர் அவருடைய சாட்சியத்தில் 17.08.2021ம் தேதி காலை 07.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.பழனி நிலைய அலுவலில் இருந்தபோது ஸ்ரீமான் மகன் தவசி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 173/2021 பிரிவுகள் 279, 304A இ.த.ச (Hit & Run)–ன் கீழ் முதல் தகவல் |

| | | | |
|---|---|---|---|
| | | | அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் |
| 5 | கேள்வி | : | அ.சா.5–மேலும் அவருடைய சாட்சியத்தில், இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி 17.08.2021 ம் தேதி காலை 08.15 மணியளவில் சம்பவ இடம் சென்று ராமர் மற்றும் சுதாகர் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் (அ.சா.ஆ.2) மற்றும் வரைபடம் (அ.சா.ஆ.4) தயார் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் |
| 6 | கேள்வி | : | அ.சா.5– மேலும் அவருடைய சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி சாட்சிகள் தவசி, ராஜலிங்கம், பாண்டி, பொன்மலர், சிவக்குமார், காட்வின்ராஜா, சந்திரசேகர் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் |
| 7 | கேள்வி | : | அ.சா.5– மேலும் அவருடைய சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி 17.08.2021ம் தேதி சாத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து இறந்துபோன ஸ்ரீதர் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்பாக பிரேத விசாரணை செய்து அறிக்கை (அ.சா.ஆ.5) தயார் செய்ததாகவும், பின்பு பிரேத விசாரணை சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் பிரேதத்தை தலைமை காவலர் சதீஸ்குமார் என்பவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அரசு மருத்துவரிடம் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக ஒப்படைக்க அனுப்பியுள்ளதாகவும், சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் |
| 8 | கேள்வி | : | அ.சா.5 மேலும் அவருடைய சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி இவ்வழக்கில் விபத்துக்குள்ளான TN 72 G 0303 என்ற பதிவெண் கொண்ட Royal Enfield இருசக்கர வாகனம் மற்றும் TN 30 U 6639 பதிவு எண் கொண்ட லாரி ஆகிய வாகனங்களை ஆய்வு செய்த விருதுநகர் வட்டார போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செல்வராஜ் என்பவரை விசாரணை செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் (அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7) பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | அந்த வாகனத்தை நான் தான் ஓட்டினேன், அதை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார்கள். |
| 9 | கேள்வி | : | அ.சா.5 மேலும் அவருடைய சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி இவ்வழக்கில் இறந்த ஸ்ரீதரின் இறப்பை உறுதி செய்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் லிங்கேஸ்வரன் என்பவரை விசாரணை செய்து அவரிடமிருந்து விபத்து பதிவேடு பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்ததாகவும், இவ்வழக்கில் வாகனவிபத்தில் இறந்து போன ஸ்ரீதர் என்பவரது பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்ட உள் உறுப்புகளை இராமநாத வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைப்பு செய்த முதல் |

| | | | |
|---|---|---|---|
| | | | நிலை காவலர் செல்ல முனியாண்டி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கில் இறந்து போன ஸ்ரீதரின் உள் உறுப்புகளை பகுப்பாய்வு செய்ய இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வாளர் திரு.கோவிந்தராஜ் என்பவரை விசாரணை செய்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்து ஸ்ரீதரின் உடல் உள்உறுப்புகளின் பகுப்பாய்வு ஆய்வறிக்கையை (அ.சா.ஆ.8) பெற்றதாகவும், சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் |
| 10 | கேள்வி | : | அ.சா.5 மேலும் அவருடைய சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி இவ்வழக்கில் இறந்து போன ஸ்ரீதர் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் மரிய கிரேஷ் மோனிஷா என்பவரை விசாரணை செய்து அவரிடமிருந்து பிரேதபரிசோதனை அறிக்கை (அ.சா.ஆ.9) மற்றும் இவ்வழக்கில் இறந்து போன ஸ்ரீதர் என்பவரது இறப்பிற்கான காரணம் குறித்த இறுதி கருத்துரை சான்று (அ.சா.ஆ.10) பெற்று அவரது வாக்குமூலத்தினை பதிவு செய்ததாகவும், சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | | : | பொய் |
| 11 | கேள்வி | : | அ.சா.5 மேலும் அவருடைய சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி தலைமை காவலர்கள் செல்லமுனியாண்டி, முதல் நிலை காவலர் சதீஸ்குமார், தலைமை காவலர் ராஜா மாணிக்கம், மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் பழனி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் |
| 12 | கேள்வி | : | அ.சா.5 மேலும் அவருடைய சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி அவரது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரி மீது பிரிவுகள் 279, 304A இ.த.ச –ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 13 | கேள்வி | : | வழக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 14 | கேள்வி | : | உங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | இல்லை |

கேள்விகள் என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர், எண்.2, சாத்தூர்